பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலைமையை மாற்றி விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய எல்லா டிராக்டர்களுக்கும் ஆண்டுக்கொரு முறைதான் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையையும், அந்த வரியை வசூலிக்கின்ற முறையை அறவே ரத்து செய்யவும் அரசாங்கம் முன் வருமா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குப் பயன்படுத்த கூடிய சொந்த வண்டியாக இருந்தாலும், வாடகை வண்டியாக இருந்தாலும், வரியே இல்லை. அந்த வரியை ரத்து செய்திருக்கிறோம். ஆனால் 6 மாதத்திற்கு ஒரு முறை வில்லைகள் வாங்க வேண்டுமென்று சொல்லியிருப்பதற்குக் காரணம் அந்த வண்டிகள் தனியாரால் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், வாடகைக்கு அதைப் பயன்படுத்துகின்றபொழுது, நிறைய வேலைகள் அதற்கு இருக்கிற காரணத்தால், 6 மாதத்திற்கு ஒரு முறையாவது அதிகாரிகள் பார்த்து நல்லமுறையில் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை வைத்திருக்கிறோமேயொழிய வேறு எதற்காகவும் இல்லை.

கடையநல்லூரில் நூற்பு மற்றும் சாயத் தொழிற்சாலை.

*வினா எண். 197— திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூரில் ஒரு நூற்பாலையும், சாயத் தொழிற்சாலையும் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :—

இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதி கைத்தறி நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. ஏறக்குறைய 6,000 தறிகள் அங்கேயிருக்கின்றன. அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏறத்தாழ 7,000 தறிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு நூற்பாலை அமைக்கப்படுமா ? அதே நேரத்திலே, சாயம் போடுகின்ற தொழில் அங்கே அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தால், சாயத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில்தான் பேட்டையில் நவீன சாயத் தொழிற்சாலை ஒன்று திறந்து விடப்பட்டிருக்

கிறது. நூற்பாலை சம்பந்தமாக நாசரத்திலும், பேட்டையிலும் ஏற்கனவே இரண்டு மில்கள் இயங்கி வருகின்றன. அவை தற்போதைய நெசவாளர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. பேட்டையில் இன்னும் அதிகமாக தேவை என்ற நிலை ஏற்பட்டால், சி பிரிவு ஒன்றையும் சரியான இடத்தில் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைப்பாடி நகரில் பொதுப்பணித் துறை தங்கும் விடுதி.

*வினா எண். 198— திரு. இ. கணேசன் : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி தொகுதி, இடைப்பாடி நகரில், பொதுப்பணித்துறையின் பொறுப்பில் புதிய 'தங்கும் விடுதி' கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-10]

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைப்பாடி தொகுதியிலே 3 ஒன்றிய பஞ்சாயத்துகளும் 500-க்கும் மேற்பட்ட ஜனத் தொகை இருக்கின்ற நகர சபையும் இருக்கிற காரணத்தாலும், பல அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தாலும் அங்கே இருக்கக்கூடிய ஒரு சிறிய பயணர் விடுதி அங்கே வரக்கூடிய அதிகாரிகள் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றது. அதைக் கருத்திலே கொண்டு ஒரு புதிய பயண விடுதியைக்கட்ட அரசு மறு பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே., இடைப்பாடியிலே பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஒய்வு இல்லம் இல்லை. இருப்பினும் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஓய்வு இல்லம், 2 அறைகள் கொண்ட இல்லம் இருக்கின்றது. அது நல்ல நிலையில் உள்ளது. அந்த ஓய்வு இல்லம் அங்கே வரக்கூடிய அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இடைப்பாடிக்கு